

தாயுமானவரின்
பிரபஞ்சக் கோட்பாடு
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்

# தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு

இந்த உலகத்தை நாம் பார்க்கிறோம். இந்த உலகில் பல பொருட்கள் உள்ளன.

அளக்க இயலாத ஆற்றலுடைய பொருட்களாக, நம்மால் அடிமைப்படுத்த முடியாத பொருட்களாக, ஐவகைப் பெரும் பொருட்கள் அமைந்துள்ளன.

இவற்றையே ஐவகைப் பூதம் எனக் கூறுகின்றனர். அவை நிலம்,நீர், நெருப்பு, காற்று, விண் என்பன.

இவற்றின் தோற்றம் பற்றிப் புறம் 2வது பாடல் கூறுகிறது. இவற்றின் விளக்கம் பற்றிச் "சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு" என்ற குறட்பாவும் அதற்கமைந்த உரையும் தெளிவாகப் சொல்லுகின்றன.

இவையே முதலில் தோன்றின. அல்லது தோற்றுவிக்கப்பட்டன. இவை ஏன் ஐவகையாகப் பகுக்கப்பட்டன? அறுவகையாக இருக்கக் கூடாதா? எழு வகையாக இருக்கலாகாதா?

இவ்வாறு ஐவகையாகவே வகைப்படுத்தக் காரணம் என்ன? என்பதற்கெல்லம் விடை காண்பதும் கடினமே. இந்த ஐவகைப் பூதங்களைக் கொண்டதே இந்த பேரண்டமாகிய உலகம்,

அப் பேரண்டத்தில் இரண்டு நிலையில் பொருள்கள் உள்ளன. ஒன்று இயங்கும் பொருள், பிறிதொன்று இயங்காப் பொருள்.

இந்த வகைப் பாகுபாட்டைப் பார்க்கின்றோம். பார்த்த உணர அறிவையும் வகுத்துள்ளான். அந்த அறிவு ஐம்பூத உடலின், ஐம்புலன் வழியாய்ப் பெறுகின்றன.

அறிவு, இந்த ஐந்து அறிவால் முளைத்த, கிளைத்த பகுத்தறிவையும் வகுத்து, இவைகளைப் பற்றி முழு அறிவை உணர்வதற்குப் பழங் காலத்திலிருந்தே பலவகை நூல்களும் தோன்றின.



அந்த நூல்களும் பொருள் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன. இவைகள் புறநிலையில் பார்ப்பதற்கு நம் கண்ணொளியும் புறக் கதிரொளியும் தேவை. கண்களைக் காணமுடியாது.

கண்ணொளியை உயிராகவும் கதிரொளியை இயற்கை ஆற்றலாகவும் கொள்ளலாம்.

இதுபோன்று இப் பூதங்கள் இந்த உயிர் இவற்றின் தோற்றம் இயக்கம் மறைவு போன்றவற்றைக் கற்கும்போது அங்கே சமயங்கள், மதங்கள் தோன்றுகின்றன.

அவை கூறுகின்ற கருத்து அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. ஆனால் இச்சமயம் கடந்த மோன சமரசமும் அமைந்துள்ளன. இதை ஓர் உதாரணத்தால் காட்டலாம்.

வடமொழியில் இறைவனை வணங்கல் வேண்டுமென்றோ, தென்மொழியில்தான் வழிபடல் வேண்டுமென்றோ. உலகப் பொதுமொழியாம் ஆங்கிலத்தில் தான் ஆக வேண்டுமென்றோ இல்லை.

---

பல மொழியினர், நாட்டினர் ஒன்றாக இணைந்து நெஞ்சில் நினைந்து நெக்குருகி மொழியின்றி மௌன வழிபாடாக வழிபடுகின்றறோமே, இதுவே. “சமயங் கடந்த மோன சமரசம்” என்று கூறலாம்.

நாம் தாயிடமிருந்து தோன்றி உள்ளோம். தாயின் பண்புகளை நமக்கு அவள் தரும் அன்பால் அருளால் செயலால் உணருகின்றோம்.

தாய்க்கு, நீ குழந்தையிடம் அன்பு செலுத்து என யாராவது கூறுதல் வேண்டுமா? குழந்தையிடம் நீ தாயிடம்அன்பு செலுத்து எனச் சொல்லுதல் தேவையா? தேவையில்லையே.

இவை இயல்பான உணர்வுகள், தாயிடமிருந்து தோன்றிய நாம், தாயை உணர முயல்வது போல், இந்த உலகைத் தோன்றுவித்த இயற்கையை, அறிய விழைகின்றோம்.

தாயை அணுகுதல் போல், உலகையும் இயற்கையையும், இறையையும் அணுகுகின்றோம். அதற்குக் காரணம் தாயின் அருள்தானே.

இவை அனைத்தையும் புறக்கண் இல்லாதவன் புறநிலையில் பார்க்க முடியாது. அகக்கண் இல்லான் அகநிலையில் நோக்க வியலாது. “புறந் தூய்மை”, “அகத்தூய்மை” என வள்ளுவர் பேசுவது இங்கு நினைவுக்குரியது.

அகத்தூய்மை வாய்மையால் காணப்படும். வாய்மையில்லா அகத்தால் உண்மைக் காட்சியைக் காணவியலுமா?

அதைத்தான் “பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே” எனப் பேசுகின்றார் தாயுமானவர்.

அறியாமை, இருள், மறப்பு, துன்பம் இந்த நான்கைக் கொண்டுள்ள நாம் அறிவு.தெளிவு, நினைவு, இன்பம் என்ற முழுநிலையாக அமைந்துள்ள பொருளைப் பார்க்கிறோம்.

அப்பொருள், நம்மைப் போன்று தோன்றி மறைகின்ற பொருள் அன்று. அந்தமும் ஆதியும் இல்லாதது.

---

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் உள்ளது. பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் புதுமைப் பொருளாய் உள்ளது.

இத்தகைய பொருள் முழுநிலை உடையது. பேரறிவு உடையது. வரையறை அற்றது. அப்பொருளே முடிந்த “பொருள்.

பிரணவ ரூபத்தில் இருக்கும் பொருள். அறிவு எல்லை முடியும் நிலையில் உள்ள பொருள் எனப் பேசுகின்றார் தாயுமானவர்.

ஒவ்வொருபாடலில் இயற்கை அல்லது இறைவன் தன்மையினையும், அதனைக் காணும் நோக்கம், விருப்பம் என்பன உடைய உயிர்கள் பற்றியும் பேசுகின்றார்.

ஐவகை எனும்பூதம் ஆதியை வகுத்து

ஐவகை எனும்பூதம் ஆதியை வகுத்து, அதனுள்
அசரசர பேதமான
யாவைவும் வகுத்து. நல் அறிவையும் வகுத்து, மறை
ஆதிநூ லையும் வகுத்துச்,

சைவமுத லாம் அளவில் சமயமும் வகுத்து, மேல்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ உன்னையான் அணுகவும்
தண்அருள் வகுக்க இலையோ?

பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்இலா மெய்யர் அறிவில்


---

போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
      போக்குவரவு அற்றபொருளே!

தெய்வமறை முடிவு ஆன பிரணவ சொரூபியே!
      சித்தாந்த முத்தி முதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
      சின்மயா னந்தகுருவே.      (சின்மயா 4 தா.பா )

எல்லாத் தீமைகட்கும் அடிப்படை பொய். "ஒன்றாக நல்லது கொல்லாமை. மற்றதன் பினசாரப் பொய்யமை நன்று" என்பது வள்ளுவம்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று என்பதும் வள்ளுவர் வாக்கு



---

வள்ளுவர் கொல்லாமைக்கு முதலிடம் தந்தார். இளங்கோ அடிகள் “வாய்மையின் வாழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்” என வாய்மைக்கு முதலிடம் தருகின்றார்.

வாய்மை உடையோருக்கு அனைத்தும் சித்தியாகும். உயிர் ஈடேறும். மீட்புக் கிடைக்கும்.

தாயுமானவர் இந்தப் பிறவியிலேயே இறைவனை அடைய வேண்டும் என்ற துடிப்பு உடையவர் என்பதை அவர் பாடல்கள் காட்டுகின்றன. பிற சமயங்களையோ பிற கடவுளரையே பழித்துப் பேசில்லை.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர். மணிவாசகர் போன்றோரிடம் பிறமதப் பழிபுண்மை வெளிப்படை.

அதுபோன்றே இவர் திருமால், பிரமன், இந்திரன் இவர்களைப் பற்றி மிகுதியாகக் குறிப்பிடவில்லை. மாறாக, சைவமே சிறந்தது என்ற பொருள்படப் பேசுகின்றார்.

## தாயுமானவர் தரும் பிரபஞ்சக் கோட்பாடு இரகசியங்கள்

.

தாயுமானவரின் 1452 பாடல்கள் --56 தலைப்பில் அமைந்துள்ளன. இதில்- பரிபூரணானந்தம் என்ற தலைப்பில்- 160 வரிகளில்- பத்து பாடல்களில்- பிரபஞ்சக்கோட்பாடு இரகசியத்தை நமக்குத் தந்துள்ளார்.

அண்டத்தின்கண்- ஞானிகள் பலர் அவதரித்து --நல்மார்க்கங்களைப் போதித்துச் சென்றிருக்கின்றனர். அவர்களுள் ஒருவரே -பிரபஞ்சத் தத்துவத்தை --ஆன்மீகத்தின் வழி --தெளிவுறச் செய்தவர்- நமது தாயுமானவர் ஆவார்.

---

ஆன்மீக உணர்வை–வெகுவாக-- விரவிக் கலக்காமல்,-- அறிவாற்றலின் அடிப்படையில்–படைக்கப்பட்ட பாடல்களே-- பரிபூரணானந்தம் ஆகும்.

பிரபஞ்சக்கோட்பாடு-- தாயுமானவரால் விரித்துரைக்கப்படும் தன்மையை -- பத்து தலைப்புகளில்- நாம் -- எளிமையாகப் புரிந்து கொள்ளலாம்.

1. பிரபஞ்சக்கோட்பாடு
2. ஆத்ம சொரூபமும் பிரகாசமும்
3. வெப்பமும் வேதனையும்
4. வளர்ச்சியும் ஒடுக்கமும்
5. இயற்கையும் ஓசையும்
6. சிற்றலையும் பேரலையும்
7. ஜனனமும் மரணமும்
8. அண்டமும் பகிரண்டமும்
9. ஸ்தூலமும் சூட்சுமமும்
10. ஜீவாத்மாவும் பரமாத்மாவும்

## 1. பிரபஞ்சக்கோட்பாடு

இயற்கையின் கூறுகளான- நிலம் ,நீர் ,தீ ,காற்று ,வான் -ஐந்திற்கும் அப்பால்- அவற்றை ஆட்டுவிக்கும் ஒன்றே-- கடவுள். இந்தக் கொள்கைக்கு-- நிலைக்களனாக அமைவது--பிரபஞ்சமும்-- அதில் வசிக்கும் ஜீவன்களும் ஆகும்.

உயிர்வாழ் ஜீவன்களும்--பிரபஞ்சமும்-- ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது.

---

பிரபஞ்சம்-- பல்வேறு நட்சத்திரக் குடும்பங்களாக இருப்பினும்-- அதன் தலைமையான --சூரியன் -தனித்தியங்குவதோடு-- மட்டுமல்லாமல் , இதர கோள்களுடனும்-- இணைந்து இயங்கிவருகிறது.

இதைப்போலவே--மனிதனும் -தனித்தும் -கூட்டாகவும்-- இயங்கிவருகின்றான்.பிரபஞ்சம் -மனிதகுல ஒற்றுமைச் செயல்பாடு–இவ்விதமாய்---- தாயுமானவரால் பரிபூரணானந்தத்தில் உணர்த்தப்படுகிறது.

## 2. ஆத்ம சொரூபமும்- பிரகாசமும்

ஆழியிலிருந்து, நீர் கண்ணுக்கு தெரியாத நிலையில் --ஆவியாகி ,பின் -மேகமாக உருமாறுகின்றது.பகலில் சூரியனையும் --இரவில் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களையும் --மறைத்துவிடுகிற இயல்பு --அந்த மேகத்திற்கு வந்துவிடுகின்றது.

நீர்-- தூய ஆவியாக இருந்த வேளையில் --சூரிய சந்திரரை-- மறைக்கவில்லை.மேகமாக உருவெடுத்த போதுதான் ---பிரகாசம் நிறைந்த கோள்களையெல்லாம் --மறைக்கின்றது. இந்த மேகத்திற்கு --ஒப்பானதுதான் -விருப்பு வெறுப்பு மிகுந்த-- மானிட மனம்.

ஆத்ம சொரூபத்தில் தோன்றுகின்ற-- இம்மனித மனம்-- ஆத்மபிரகசத்தை அழித்துவிடுகின்றது. மனிதமனத்தையும்- பிரபஞ்சத்தையும் ஒப்பிட்டு --' மனதற்ற -பரிசுத்த நிலையை அருள்வாய் '-- (பரி.10: 7) என்று பாடுகின்றார் தாயுமானவர்.

பஞ்சபூதங்களுள் ஒன்றான --ஆகாயத்தையும் --மனித ஜீவனையும் --ஒப்பிட்டு இக்கருத்து அமைந்துள்ளது.

## 3. வெப்பமும் வேதனையும்

உயிர்வாழ் ஜீவன்களுக்கு --வெப்பம் இன்றியமையாதது என்பது வெளிப்படை.. உயிரை ஓம்புதலும் --உடல் வெப்பத்தைக் காத்தலும்-- இணைபிரியா ஒன்றாகவே இருந்து வருகின்றது.

மிகைப்பட்ட வெப்பம் --காய்ச்சலாக உருமாறி-- மனித உயிரையே-- போக்கிவிடும்.அதுபோலவே-- மிகைப்பட்ட ஆசைகளை- மானிடர் கொள்ளின்– வெப்ப நோயைபபோல-- அவை -பொருந்தா--ததாகி அவனைச்-சீரழித்துவிடும்.

இதனையே ' ஆசைக்கோர் அளவில்லை ' (பரி.10:1) என தாயுமானவர் உரைக்கின்றார்.

பஞ்ச பூதங்களுள்--ஒன்றான --நெருப்பையும் -மனிதனையும்-- இணைத்து இக்கருத்து
சொல்லப்பட்டிருக்கின்றது.

## 4. வளர்ச்சியும் ஒடுக்கமும்

உலகச் செயல்பாடுகள் அனைத்தும் --ஆதர்ஷண சக்தியே.
!இப்பிரபஞ்சத்தில் வீசுகின்ற காற்றானது --நெருப்பை வளர்க்கின்றது
;ஒடுக்கவும் செய்கின்றது.

பிரபஞ்சத்தில் வசிக்கும் ஜீவன்களும் .--- ஜடப்பொருட்களும்-- இயங்குவதும் -ஒடுங்குவதும்--கடவுளின் செயல்பாட்டினாலேயாகும் .உயிர்கள் அறிந்து செய்கின்ற செயலும்--- ,அறியாமல் செய்கின்ற செயலும்--- முறையே--- வளர்ச்சிக்கும் --,ஒடுக்கத்திற்கும்--காரணமாக அமைகின்றது.

இதனையே --'சந்ததமும் எனது செயல்' (பரி .5:1 ) என்று--
பாடுகின்றார் தாயுமானவர். இதில்-- பஞ்ச பூதங்க
ளுள் ஒன்றான--- காற்றையும் மனித செயல்பாடுகளையும் -ஒப்புமைப்படுத்தி -தாயுமானவர் உரைக்கின்றார்.

-----------------------------------------------------------------------------------------------------------------------------

## 5. இயற்கையும்- ஓசையும்

இயற்கையினின்று-- இடைவிடாது --ஓசை --உருவாகிக் கொண்டே--யிருக்கின்றது.ஓயாமல்---இயங்குவதற்கே ---இயற்கை எனப் பெயர். ஓசையும் இயற்கையும்-- ஒருபொழுதும் பிரிக்க இயலாத அளவிற்கு ---ஒற்றுமையினையுடையவை.

பிரபஞ்சம் முழுமைக்கும் -அடிப்படையாய் இருக்கின்ற ஓசைக்கு--- ' நாதப் பிரம்மம் ' என்ற பெயருள்ளது.-

ஜடப்பொருட்கள் எல்லாம்--- சப்த சொரூபமே ! மனித ஜீவன்களின் செயல்பாடுகள் அனைத்தும் ----ஓசையுடனே நடக்கின்றன.

உயிர்வாழ் மனித ஜீவன்கள்--- 'தெய்வ நாமா ' போன்ற நாதங்களை உச்சரித்து ---அவரவர் ஆத்ம சொரூபங்களை ---புதுப்பித்துக் கொள்கின்றனர்.----இதனையே---தாயுமானவர் ' நாதவடிவென்பர் ' ( பரி.6:3 ) என்கின்றார்.-

இதில்--பஞ்ச பூதங்களுள் ஒன்றான ---நிலத்தையும்--ஜீவன்களையும் -இயைபுப்படுத்திக்--கூறுகின்றார் -தாயுமானவர்.

## 6. சிற்றலையும் -பேரலையும்

பிரபஞ்சத்தின் மேற்பரப்பில்--- நிலத்தைவிட ---நீர் மிகுதியாக உள்ளது.மேலும்-- அதிஆழமான பகுதியும்--- நீரிலுண்டு.

இந்த ---விரிந்த நீர்ப்பரப்பு -பேரலையாக---உருவெடுத்து ---நிலத்தின்மீது , நெடுந்தூரத்திலிருந்து-- பயணிக்கத் தொடங்கி---நிலத்தின்மீது வந்து விளையாட ---இயலும்.

---

ஆயினும் ----அது ---பேரலையாக உருவெடுத்தும்--- சிரமம் அளிக்காது---- சிற்றலையாக -----கரையோடு விளையாடிக் கொண்டிருக்கின்றது.

இறைவனும்--- இதைப்போல்---- ஆத்ம பக்தர்களுடன்---- சிறு சிறுவிளையாடல்களை வைத்துக் கொள்கின்றான்.----இதனையே --- தாயுமானவர்---- 'ஆழாழி கரையின்றி நிற்கவில்லையோ ?' ( பரி.9 ; 1 ) என - வினவுகின்றார்.

இதில்---பஞ்சபூதங்களுள் ஒன்றான--- நீரையும்--- மனிதகுலத்தையும்---- இணைத்துப் பாடுகின்றார் தாயுமானவர்.

7. **ஜனனமும்- மரணமும்**

பிரபஞ்ச நிகழ்வை- 'ஒரு நாள் ' என்று ---குறிக்கின்ற வேளையில்----- அதில் ---பகலும் இரவும் அடங்கியிருக்கின்றன.

அதேபோல் -----மனித உயிர்களின் --'ஜென்மம்' என்று சொல்லுகின்ற வேளையில் --அதில் ஜனனமும் மரணமும் ---அடங்கிக் கிடக்கின்றன.

எந்த ஜீவன் -கர்மம் செய்யாமல்--- வாழ்வை நடத்துகின்றதோ --அதற்கு ---அடுத்த ஜென்மம் என்பதில்லை.

எந்த ஜீவனுக்கு---- 'கர்மா' இருக்கிறதோ ----அதற்கு ----ஜனன மரணம்--- இடைவிடாது ---நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.----இந்நிகழ்வு ----பகல்-இரவு ---- மாறி மாறி தொடர்வதைப் போன்றதுஎன்கிறார்--- தாயுமானவர்.

இதையே 'தொடு வழக்காய் ஜென்மம் வருமோ' ( பரி .5 ;-6 ) என்னும் அடிகள் ---உணர்த்துகின்றன. இதில் பிரபஞ்சத்தின் --தொடர்

---

நிகழ்வும்--- மனித வாழ்வின்----- இருவேறு பெரு நிலைகளும் ---இணைத்துப் பேசப்படுகின்றது.

## 8. அண்டமும் --பகிரண்டமும்

நமக்கு- கட்புலனாகும்--- சூரியன் ,சந்திரன் ,பூமி போன்ற --இயற்கை உருவாக்கங்கள்--- அகன்று -பரந்து--- விரிந்துள்ளன.

ஓர் உள்ளங்கை ---அளவு--நீர்---போன்றது---- பிரபஞ்சம்.------நம் அறிவுக்கு---எட்டாத பகுதி ---கடல்நீர் அளவானதாகும்------.உள்ளங்கை நீரைத் தெரிந்து கொண்டால் ----கடல்நீர் முழுமையும்---
தெரிந்து கொண்டதற்கு ----ஒப்பானதாகும்.

அதேபோல்----- பிரபஞ்சத்திற்கு -கட்புலனாகும்----பகுதியெல்லாம் ---தெரிந்து கொண்டால் ,----நமக்கு----- கட்புலனாகாத பெருந்தொகுதி பற்றி---அறிந்து கொள்ள இயலும்.

பிரபஞ்சத்தின் தொகைக்கு----- 'அண்டம்' என்று-- பெயர்.------இதற்கு அப்பாலிருக்கின்ற ------அனந்தகோடி பகுதிகள் ----கணக்கிட இயலா நிலையில்----உள்ளன.

இவற்றிற்கு---- 'பகிரண்டம் ' எனப் பெயர்.-----இவையனைத்தும் ---மாயா விகாரமே---என்பதனையே----- 'அண்ட பகிரண்டமும் மாயா விகாரமே ' (பரி.4;1 ) -----என்னும் அடி---விளக்குகின்றது.

ஒருசிலவற்றை தெரிந்து கொள்வதன் மூலம் -----மனித குலம் -----பலவற்றை----பற்றிய இயலும் என்பதனை ----பிரபஞ்சத்தோடு ----ஒப்புமைப் படுத்திப் பாடியுள்ளார்---தாயுமானவர்.

## 9. ஸ்தூலமும்--- சூட்சுமமும்

பிரபஞ்சத்திலிருக்கும் --ஐம்பூதங்களும் --ஒன்று -மற்றொன்றை- பரிணமிக்கவல்லது.

அவ்விதம் பரிணமித்தபின்---- மீண்டும்--- தன் முந்திய நிலைக்கு----- ஒடுங்கிப் போவதுண்டு.

பூதங்களுள் -----மிக சூட்சுமமமான ----ஆகாயவெளி -----எங்கும் வியாபகமாயிருக்கின்றது ; அந்த வெளியிலிருந்து -----வாயு உருவாகின்றது ;

நெருப்பானது ----வாயுவிலிருந்து---- வருகின்றது ; நீர் உண்டாக -நெருப்பு--- துணையாகின்றது.-----அனைத்தும்---- நிலத்திலே --நிகழ்கின்றது.
சூரியனிடத்திலிருந்து------சிதறிய பூமி---- நீராகவும் ,நிலமாகவும் அமைகின்றது. அது விரிந்தபின்----வெப்பத்தில் ----ஒடுங்குகின்றது.

வெப்பம்---- காற்றில் -ஒடுங்குகின்றது. காற்று---வெட்டவெளியில் ---- மறைகின்றது.-----ஸ்தூலமாயிருக்கும் பூதம்--- இவ்வாறு ----சூட்சுமமாக- மாறுகின்றது.

மனித வாழ்வும்---- இது போன்றதுதான்.-----நிலையானது என்று எண்ணுகின்ற----மனித வாழ்க்கை--- நிலையற்றதாக ---மாறிவிடுகின்றது்

.இதனையே ----தாயுமானவர் 'பூதலயமாகின்ற மாயை ' (பரி.6 ; 1 ) எனக்---கூறுகின்றார்.

ஐம்பூதங்கள் ஒன்றுக்குள் ஒன்று ---அடங்கி ஒடுங்குவது போல்தான்----- மனித வாழ்வும்- அடங்கியொடுங்கும் என்ற கருத்தே----- இதன்வழி உரைக்கப்பட்டுள்ளது.

## 10. **ஜீவாத்மாவும்--- பரமாத்மாவும்**

பஞ்சபூதங்கள் ----பரம்பொருளிடத்து தோன்றி ---வந்தவைகளே ! ஜீவன் ---தன்னை , அறிவுப்பொருளாக உணர ----அவனுடைய அறிவுக்கு--- மூலமாயிருப்பது ---பரம்பொருளின்--- பேரறிவாகும்.

ஒருயிர்--- மற்றோர் உயிருக்கு---- அந்நியமானது என ----மனிதன் எண்ணுகின்றான்.

அந்த எண்ணத்திற்கு மாறாக---- 'எந்த நிலையிலும்--- ஜீவன்--- பரமாத்மாவிற்கு அந்நியமானவன் அல்லன் ' என்பது குறித்தே ---- தாயுமானவரின் பரிபூரணாந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது.

தாயுமானவர்--- தான் சொல்லவந்த கருத்தை -----பிரபஞ்சத்தோடு---- ஒப்பிட்டு சொன்ன தன்மை ---சிறப்புடையதாகும். -----'யான் எனும் தன்மை நின்னையன்றி இல்லாத தன்மையால்-- வேறு அல்லேன். ' (பரி.5;1 -2 ) என்னும் அடிகள்---மேற்குறிப்பிட்டனவற்றை--- விளக்குகின்றன.

### வேதாத்திரி மகரிஷி தரும் **பஞ்ச பூத தத்துவம்**:

வேதாத்திரி மகரிஷி அவரது ஆராய்ச்சியை பஞ்ச பூத தத்துவத்தில் இருந்தே தொடங்கினார். ஆகையால் நாமும் இந்த விளக்கத்தை அங்கிருந்தே தொடங்குவோம்.

நம் முன்னோர்கள் இந்த பிரபஞ்சத்தை 5 பௌதிக பிரிவுகளாக பிரித்தனர். அவை

1. விண் துகள் (அல்லது) பரமாணு (அல்லது) ஆகாசம் (infinitesimal energy particle).
2. காற்று (air)
3. அழுத்தக் காற்று (அல்லது) நெருப்பு (heavy air or fire)
4. நீர் (liquid)

---

5. கெட்டிபொருள் (solid)

**இந்த 5 பூதங்களுக்கும் மூலமாக இருப்பது எது?**

இந்த பிரபஞ்சத்தில் எந்த ஒரு பொருளை எடுத்து, அதன் மூலகங்களை ஒவ்வொன்றாக பிறித்துக் கொண்டே வந்தால், கடைசியில் மிஞ்சுவது என்ன?

அணு என்ற நிலைக்குத்தான் வருவோம். அதாவது பரமாணு என்ற நிலைக்கு வருவோம்.

அணு என்றால் சிறிய என்று பொருள், பரம அணு என்றால் அதை விட ஒரு சிறிய பொருள் இந்த பிரபஞ்சத்தில் கிடையாது என்று பொருள்.

ஆக இந்த பிரபஞ்சத்தில் நாம் காணும் எந்த ஒரு பொருளும் பரமாணுக்களின் (விண்ணின்) கூட்டு சேர்க்கையே என்பதுதான் பஞ்சபூத தத்துவத்தின் கருப்பொருள்.

இதை நவீன அறிவியலும் ஒப்புக் கொள்கிறது (mass is an association of energy particles). ஆக விண் என்ற துகளே (பரமாணு) மற்ற நான்கு பூதங்களுக்கும் மூலப்பொருளாக உள்ளது என்பது தெளிவாகிறது.

**பரமாணு எங்கிருந்து வந்தது?**

இது பற்றிய ஆராய்ச்சியை மகரிஷி அவர்கள் தொடங்கும் பொழுது, அவருக்கு முதலில் அடிபட்ட கேள்வி இதுதான்.

இந்த பிரபஞ்சத்தில் விண், விண்ணின் கூட்டு சேர்கை, இதைத் தவிர வேறு என்ன உள்ளது? இந்த விண் என்ற நிகழ்ச்சி எங்கே நடைபெறுகிறது?

இந்த கேள்விக்கு விடையாய் வந்தது **சுத்தவெளி (Absolute SPACE) அல்லது வெட்டவெளி.**

---

இரண்டு பரம அணுக்களுக்கு (விண் துகள்களுக்கு) இடையில் என்ன இருக்கிறது, சுத்தவெளிதான் உள்ளது. அப்படி என்றால் இந்த விண் என்ற பூதம் சுத்தவெளியில் இருந்துதான் வந்திருக்குமோ!

ஆனால் சுத்தவெளி ஒரு வெற்றிடம்தானே, அதில் இருந்து எப்படி அணு பிறக்க முடியும் என்று சிந்தித்த பொழுது அவருக்கு அடிபட்ட அடுத்த கேள்வி, சுத்தவெளி ஒரு வெற்றிடம் என்று எதை வைத்து முடிவு செய்தோம்? சுத்தவெளி உண்மையில் ஒரு ஏதுமற்ற வெற்றிடமா?

**சுத்தவெளியே ஒரு வெற்றிடமா?**

விண் மற்றும் விண்ணின் கூட்டு இயக்கங்களான மற்ற பூதங்களும் சுத்தவெளியில்தான் மிதந்து கொண்டு இயங்குகிறது.

விண்ணின் கூட்டு சேர்கையால் உருவான பூமி, சூரியன் மற்றும் அதை சுற்றிலும் உள்ள மிகப் பெரிய நட்சத்திரங்கள் அனைத்தும் இந்த சுத்தவெளியில் தான் மிதக்கிறது.




**இந்த பிரபஞ்சம் முழுவதையும் தன்னில் தாங்கிக்கொண்டும் மிதக்க விட்டுக்கொண்டும் இருக்கும் இந்த சுத்தவெளி எப்படி ஒரு சாதாரண வெற்றிடமாக இருக்க முடியும்?**

முடியாது, இது ஒரு எல்லாம்வல்ல, பிரபஞ்சத்தில் உள்ள எல்லா

------------------------------------------------------------------------------------------------------------------------

பொருட்களையும் விட சக்தி வாய்ந்த ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

### சூனியமே உறுதிப் பொருள் :

“சூனியமாம் இருள் ஏதுமற்ற தென்றும்
சொல்வார்கள் புலனுணர்வின் அளவில் நின்று
சூனியமே கோடானு கோடியண்ட
சூரியன், சந்திரன் இவற்றைத் தாங்கி நிற்கும்'
சூனியமே வலிமிக்க உறுதியாய் நின்று
சொரூப கோடிகளை ஈர்த்தியக்கு தன்றோ?
சூனியத்தை அணு நிலையைக் கொண்டா ராய்ந்தே
சூட்சுமமாய் யூகித்து விளங்கிக் கொண்டேன்.”

### ஒன்றே பலவும்:

ஒன்றுமில்லா ஒன்று இருள், பூர்ணம், மௌனம்
உள்ளுணர்ந்து ஒடுங்கி நிற்கும் நிலையைப் போன்று
ஒன்றுமில்லா ஒன்றுக்கு ஆதியில்லை
ஒலி, வெளிச்சம், இயக்கம் அணு அதன் பூரிப்பு
ஒன்றுமில்லா ஒன்று இந்த நாலானாலும்
ஒன்றைவிட்டு ஒன்று பிரியாத தாகும்
ஒன்றுமில்லா ஒன்றின் இரகசியத்தைக் கண்டால்
உண்டுஎன்பது இல்லை என்பது இரண்டும் ஒக்கும்.

அது மட்டும் அல்லாமல், இந்த சுத்தவெளி மட்டும்தான் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது,

இந்த பிரபஞ்சத்தில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும் (சிறிய விண் துகள் முதல் பெரிய நட்சத்திரங்கள் வரை) அதற்க்கு இடமாக இருப்பது இந்த சுத்தவெளிதான்.

இந்த ஆராய்ச்சியை நீங்களும் உங்கள் மனதினால் செய்யலாம். உங்களை சுற்றி இருக்கும் பொருள் மற்றும் நிகழ்ச்சியை ஒவ்வொன்றாக மனதை கொண்டு நீக்குங்கள்.

உங்களை சுற்றயுள்ள வீடு, மக்கள், உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்கள், ஊர், நாடு, பூமி, கோள்கள், சூரியன், நட்சத்திரம் என்று அனைத்தையும் நீக்குங்கள், கடைசியில் உங்களையும் நீக்குங்கள் ......

மீதம் என்ன இருக்கும், ஒரு எல்லையற்ற இருட்டான இடம் தான் மீதம் இருக்கும், இந்த இடத்தை உங்களால் அங்கிருந்து நீக்க முடியுமா, நீக்கினாலும் அங்கே மீதம் இருப்பது அதே இருட்டான இடம் தான் (சுத்தவெளி).

எந்த ஒன்று எல்லா இடங்களிலும் இருக்கிறதோ அதுவே இந்த பிரபஞ்சத்தில் உள்ள எல்லா இயக்கங்களிலும் பங்கு கொண்டு அந்த இயக்கத்தை ஒழுங்குபடுத்தவும் கண்காணிக்கவும் முடியும்.

ஆக எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து, அணைத்து பொருள்களிலும் நிகழ்சிகளிலும் ஊடுருவி நிறைந்து இருப்பது இந்த சுத்தவெளி என்கின்ற எல்லாம் வல்ல எல்லையற்ற இருட்டான இடம் தான்.

அது மட்டும் இல்லாமல், விண் என்பது ஒரு இயக்கம், சுத்தவெளி என்பது ஒரு இயக்கமற்ற நிலை, ஒரு இயக்கத்தின் பிறப்பிடம் இயக்கமற்ற நிலையிலிருந்து தான் வந்திருக்கவேண்டும்.

ஆகையால் **விண் என்ற பூதம் சுத்தவெளியில் இருந்துதான் வந்திருக்க வேண்டும்** என்ற முடிவிற்கு வந்தார்.

---

வெட்டவெளி சக்தி என்பதில்லையானால்
வேறு எந்த ஒன்று வலிது
பிரபஞ்சத்தில்

தொட்ட தொடப்பட்ட
இரு பொருட்களூடே
தொட ... தொட்டதாய்
எண்ணும் அரூபம் யாது


பட்டப் பகலில்
விண்மீன்கள் காணா
பார்வையில்லார்க்கு
ஒருநாளும் அறியா


எட்டவில்லை
அறிவுக்கு என்றால்
உள்ள இறைநிலை எங்கே
ஒளிந்து கொள்ளும் ....

இவருடைய ஆராய்ச்சி இதோடு நிற்க வில்லை, எப்படி இந்த சுத்தவெளி விண்ணாக மாறியது? என்ற கேள்வியில் பல நாட்கள் சிந்தனை செய்துள்ளார்.

அவரின் ஆராய்சிக்கு பெரிதும் துணையாக இருந்தது மன அலைச்சுழலை குறைத்து மனதை நுண்ணிய நிலையில் இயங்கவைக்கும் குண்டலினி தியானமும், நம் சித்தர்களின் பாடல்களும் மற்றும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் தான். இதன் விளைவாக “பிரபஞ்ச பரிணாம கோட்பாட்டை” உலகுக்கு அளித்தார்.

---




பிரபஞ்சம்---- எவ்விதமாக சமநிலையில்--- இயங்கி ---ஒன்றுக்கொன்று --- மாறுபடாமல்–எப்பொழுதும்-- செயல்பாட்டு நிலையில் ---உலகை-இயக்குகின்றதோ--- அதுபோல் ---மானிட ஜீவன்கள் வாழ்வில்--- நேரிடும் --- இன்பதுன்பங்களை ---ஒன்றாக பாவித்து--- சமமாக-- வாழக் ---கற்றுக் கொள்ள வேண்டும்.

பிரபஞ்சத்தையும் ---மனிதகுல வாழ்வையும் ---ஒப்பிட்டு--- பரிபூரணானந்தத்தை அருளிய--- தாயுமானரின்--- மார்க்கத்தை ----பின்பற்றிச் செல்லும் வேளையில்---- நம்மோடு ----நம் சார்ந்தோரும்--- நலம் பெறுவர் என்பதில்--ஐயமில்லை .

